# கனடாவுக்கு 1990ம் ஆண்டின் பின்பு குடிவரவாளராக வந்தீர்களா?
# உங்களுடைய வேலையின் காரணமாக காயமுற்றது அல்லது நோய்வாய்ப்பட்டது உண்டா?

**குடிவரவாளர்களாக வந்தவர்கள் மத்தியில் வேலையின் காரணமாக சுகவீனமுற்றோர் அல்லது காயமுற்றோரின் அனுபவத்தை அறிந்து கொள்வதற்காக வேலை மற்றும் ஆரோக்கியத்துக்கான நிறுவனம் (Institute for Work & Health) ஆய்வு ஒன்றினை நடாத்தி வருகிறது.** வேலை செய்வோரின் ஆரோக்கியத்தையும் பாதுகாப்பையும் முன்னேற்றுவதற்கும், செய்யும் வேலையின் காரணமாக காயம் அல்லது நோய் வாய்ப்பட்ட குடிவரவாளர்களுக்கு உதவுதற்கும், உரிய வழிகளை இந்த ஆய்வு காட்டும் என்று நாங்கள் நம்புகிறோம்.

உங்கள் வேலையின் காரணமாக நீங்கள் நோய்வாய்ப்பட்ட அல்லது காயப்பட்ட அனுபவம் இருந்தால், பின்வரும் விடயங்கள் பற்றி நீங்கள் சொல்வதற்கு என்ன கருத்து உங்களிடம் உண்டு என்று அறிய விரும்புகிறோம்:

- வேலையின் பொழுது உங்களுக்கு இருக்கும் உரிமைகள்
- நீங்கள் வேலையின் காரணமாக காயமுற்றீர்கள்/ நோய்வாய்ப்பட்டீர்கள் என்று உங்கள் முதலாளி அல்லது மருத்துவரிடம் அறிவித்தது/ அறிவிக்காமல் விட்டது
- தொழிலாளர்களுக்கான நஷ்டஈட்டுத் திட்டம் தொடர்பாக நீங்கள் பெற்ற அனுபவம்
- மருத்துவர் ஒருவரைச் சந்தித்தது அல்லது வைத்தியசாலைக்குச் சென்றது
- உங்கள் உடற்காயம் அல்லது சுகவீனம் சம்பந்தமாக, எப்படி, எங்கே நீங்கள் உதவி அல்லது தகவல் பெற்றீர்கள்?
- உங்கள் வேலையின் தொடர்பில் நீங்கள் பெற்ற உடற்காயம் அல்லது சுகவீனத்தால் எப்படி உங்கள் குடும்பம் பாதிப்புக்கு உள்ளானது?

## இந்த ஆய்வில் நான் பங்குபற்றினால் என்ன நடக்கும்?

வேலை மற்றும் ஆரோக்கியத்துக்கான நிறுவனத்தில் இருந்து ஓர் ஆய்வாளர் (நீங்கள் விரும்பினால் ஒரு மொழிபெயர்ப்பு உரையாளர் சகிதம்) உங்களைச் சந்தித்து நேர்காணுவார். உங்களுக்கு வசதியான ஒரு நேரத்திலும் இடத்திலும் பிரத்தியேகமான முறையில் இதனை ஏற்பாடு செய்யலாம். வேலையின் தொடர்பில் உங்களுக்கு ஏற்பட்ட உடற்காயம் அல்லது சுகவீனத்தின் பின் நீங்கள் பெற்ற அனுபவங்கள் பற்றி நாம் உங்களிடம் கேட்டு அறிவோம். இதற்கான எமது நன்றியின் அடையாளமாக உங்களுக்கு $20 டொலர் பெறுமதியான நன்கொடைச் சான்றிதழை நாம் வழங்குவோம்.

உங்கள் அனுமதியுடன் இந்த நேர்காணலை நாம் ஒலிநாடாவில் பதிவதுடன் எழுத்து முறையிலும் பிரதி எடுப்போம். நீங்கள் விரும்பினால் எமது ஆய்வின் முடிவுகளைப் பின்பு உங்களுடன் பகிர்ந்து கொள்ளுவோம்.

## இந்த ஆய்வில் அடங்கியுள்ள ஆபத்துகளும் நன்மைகளும் எவை?

ஆபத்துகள்: உங்கள் கருத்துகளின் இரகசிய இயல்பு பற்றி நீங்கள் கரிசனம் கொண்டு யோசிக்கக் கூடும். இது சம்பந்தமாக நாம் உங்களுக்கு உறுதி கூறவிரும்புவது என்னவெனில் நீங்கள் கூறுவது எதுவாயினும் அதன் **அந்தரங்கம்** மற்றும் **அநாமதேயம்** என்பவை பேணிக் காக்கப்படும். இதில் சம்பந்தப்பட்ட ஆய்வாளர்களுக்கு மட்டுமே யாருடன் நேர்காணல் நடைபெறுகிறது என்றும் அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றும் தெரியவரும். அதுமட்டுமன்றி நீங்கள் விரும்பாத எந்தக் கேள்விக்கும் பதில் சொல்லவேண்டிய அவசியமில்லை. இந்த ஆய்வில் இருந்து எந்தக் கட்டத்திலும் நீங்கள் விலகிக்கொள்ள முடியும்.

நன்மைகள்: இந்த ஆய்வில் இருந்து கிடைக்கும் முடிவுகளைக் கொண்டு, குடிவரவாளர்களாக வந்து வேலை செய்ய ஆரம்பிப்பவர்களின் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியம் என்பவற்றைக் காக்கப் பயன்படும் சேவைகள், தகவல் மற்றும் நடைமுறைகள் என்பவற்றை முன்னேற்ற முடியும் என்று நாம் நம்புகிறோம். இந்த ஆய்வு உடனடியாக உங்களுக்கு உதவாத போதிலும் இவ்வாறான நன்மைகள் பின்பு ஏற்படுமென நம்புகிறோம்.

## இது சம்பந்தமாக மேலதிக தகவல் பெற நான் விரும்பினால் அல்லது ஆய்வுபற்றி கேள்விகள் உண்டாயின் யாருடன் தொடர்பு கொள்ளலாம்?

இந்த ஆய்வின் ஒன்றிணைப்பாளர்கள் என்ற முறையில் செயற்படும் சிந்தியா ஹம்ப்றீஸ் Cynthia Humphries 416-927-2027 தொடர்எண் 2154 அவர்களுடன், அல்லது கல் ஜொயா ஜாப்ரி Gul Joya Jafri தொடர்எண் 2227 அவர்களுடன் தொடர்பு கொள்ளுங்கள். நீங்கள் இவர்களுக்கு மின்னஞ்சல் கூட அனுப்பலாம்: chumphries@iwh.on.ca அல்லது gjafri@iwh.on.ca இந்த ஆய்வு தொடர்பான தகவல் அறிய நீங்கள் செல்லக்கூடிய இணையத்தளம்: http://www.iwh.on.ca/iw.php.

**வேலை மற்றும் ஆரோக்கியத்துக்கான நிறுவனம் பற்றி:**

வேலை மற்றும் ஆரோக்கியத்துக்கான நிறுவனம் - Institute for Work & Health (IWH) – என்பது சுயாதீனமான, இலாப நோக்கற்ற ஒரு ஸ்தாபனம் ஆகும். வேலையில் ஈடுபடும் மக்களின் ஆரோக்கியத்தை முன்னெடுத்துச் செல்வதையும், பாதுகாப்பதையும், முன்னேற்றுவதையும் இலட்சிய நோக்காகக் கொண்டு தொழிலாளர்கள், உழைப்பாளிகள், வேலை வழங்குவோர், மருத்துவ சிகிச்சைத் துறையினர், கொள்கை வகுப்போர் என்பவர்களுடன் சேர்ந்து ஆராய்ச்சியில் ஈடுபட்டு, அதன் முடிவுகளைப் பகிர்ந்து கொள்ளுதல் இதன் இலட்சிய நோக்காக அமைந்து உள்ளது. இது பற்றி மேலதிக தகவல் பெற எங்கள் இணையத்தளம் www.iwh.on.ca சென்று பாருங்கள்.

**தலைமை ஆராய்ச்சியாளர் பற்றி:**

இந்த ஆய்வின் தலைமை ஆராய்ச்சியாளராக அக்னியஸ்கா கொஸ்னி Agnieszka Kosny அவர்கள் இருக்கிறார். பொதுசன ஆரோக்கிய அறிவியல் துறையில் கலாநிதிப் பட்டம் பெற்றுள்ள இவர் ஒரு துணை விஞ்ஞானியாகப் பணியாற்றுகிறார். இந்த ஆய்வுபற்றி கேள்விகள் அல்லது கருத்துக்கள் உங்களிடம் இருப்பின் அவருடன் நீங்கள் எந்நேரமும் தொடர்புகொள்ள முடியும். அவரது தொலைபேசி எண்: 416-927-2027 தொடர்எண் 2167, மற்றும் அவரது மின்னஞ்சல் முகவரி: akosny@iwh.on.ca

இந்த ஆராய்ச்சிச் செயல்முறைத் திட்டம் மாக் மாஸ்டர் பல்கலைக்கழக ஆராய்ச்சி நீதிநெறிச் சபைத் தலைமைச் செயலகத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது: மே/பா ஆராய்ச்சி நீதிநெறிப் பணியகம் McMaster Research Ethics Board Secretariat, c/o the Office of Research Ethics 905-525-9140 தொடர்எண் 23142. மின்னஞ்சல்: ethicsoffice@mcmaster.ca

வெளியிடப்பட்டது: ஜுலை 2008
செல்லுபடியாதல் முடிவு: மே 2009

Institute for Work & Health